**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடம் இப்போது ப்ராம்ப்ட்டனில் திறக்கப்பட்டுவிட்டது

ப்ராம்ப்ட்டன், ON (July 7, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரின் புத்தம்புதிய சமுதாய மையமாகிய, ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடம், இப்போது பொதுமக்களுக்காகத் திறந்துவிடுப்பட்டுள்ளது.

ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடமானது 34,000 சதுர அடிகொண்டபடி புனரமைக்கப்பட்டுள்ளது; இதில் புதுப்பிக்கப்பட்ட உப்புநீர் குளம், விரிவுபடுத்தப்பட்ட உடை மாற்றும் அறைகள், உடற்பயிற்சிக்கான அறைகள் மற்றும் பலநோக்கு அறைகள் பலவும் அமைந்துள்ளன.இந்தப் புதிய சமுதாயக் கூடத்தில் உடற்பயிற்சி சாலை மற்றும் ஸ்க்வாஷ் விளையாட்டு மைதானங்கள் மற்றும் பலவும் உள்ளன.

ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடமானது, ப்ராம்ப்ட்டன் நகரில், 195 டான் மினாகர் ட்ரைவில் அமைந்துள்ளது. என்னென்ன வசதிகள் உள்ளன எனப் பார்ப்பதற்கும், நிகழ்ச்சிகளுக்கு பதிவு செய்துகொள்வதற்காகவும் வருகை தருக: www.brampton.ca/riverstone .

**அறிஞர் கூற்றுக்கள்**

"எங்கள் ப்ராம்ப்ட்டன் நகரத்தின் புதிய பொழுதுபோக்கு மையமான ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடத்தினைத் திறப்பதில் நாங்கள் பரவசமடைகிறோம். ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக்கான உபகரணம் பொருத்துதல், உப்பு நீர் குளத்தை அணுகும் வகையிலான சாய்தளம், உடற்பயிற்சி உபகரணங்களை மாற்றுதல் மற்றும் பல விஷயங்களில் புதுப்பித்தல்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதிகளை உபயோகிக்க அனைவரையும் ஊக்குவிக்கிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரம் மற்றும் எங்கள் சமூகத்தில் உள்ள அனைவருமே அணுகும் வகையிலான பொழுதுபோக்கு வாய்ப்புகளை வழங்க நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடமானது, ப்ராம்ப்ட்டனுக்கு சேவை செய்கின்ற வகையில் கூடுதலான சிறந்த ஒரு அம்சமாகும்."

- *ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ரிவர்ஸ்டோன் சமூக மையத்திற்கு நேயர்களை வரவேற்க நகர ஊழியர்கள் ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர். 34,000 சதுர அடி வசதி கொண்டபடி, நமது சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் உடற்பொருத்த நோக்கங்களுக்காக சிறப்பாகச் சேவை செய்வதற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ளது..”

- *பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

MEDIA CONTACT
**ஊடக தொடர்புகள்**
multiculturalmedia@brampton.ca